# தமிழ் முரசு சந்தா அதிர்ஷ்டக் குலுக்கல் விதிமுறைகளும் நிபந்தனைகளும்

## எப்படி பங்குபெறுவது

1. தமிழ் முரசு சந்தா அதிர்ஷ்டக் குலுக்கலுக்கு ("அதிர்ஷ்டக் குலுக்கல்") சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட் ("ஏற்பாட்டாளர்" அல்லது "எஸ்பிஹெச்") (முகவரி: 1000 தோ பாயோ நார்த், நியூஸ் சென்டர், சிங்கப்பூர் 318994) ஏற்பாடு செய்கிறது. அதிர்ஷ்டக் குலுக்கல் 10 டிசம்பர் 2020 அன்று நடைபெறும்.

2. இந்த அதிர்ஷ்டக் குலுக்கலில் 30 நவம்பர் 2020 தேதிப்படி தகுதிபெறும் தொகுப்புகளில் (கீழ்க்காண்பவை) ஏதாவது ஒன்றுக்கு எஸ்பிஹெச்-உடன் நேரடியாக தமிழ் முரசு சந்தா வைத்திருப்பவர்கள் ("பங்கேற்பாளர்கள்") மட்டுமே கலந்து கொள்ளலாம். ஐயப்பாட்டைத் தவிர்க்க, தற்போது சந்தா கட்டணத்தை செய்தித்தாள் விநியோகிப்பாளரிடம் செலுத்தும் சந்தாதாரர்கள் அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்குபெற தகுதிபெற மாட்டார்கள்.

3. "தகுதிபெறும் தொகுப்புகள்" என்பது பின்வருபவற்றுக்கான சிங்கப்பூர் இல்ல சந்தாக்களைக் குறிக்கிறது:

தமிழ் முரசு அச்சுப்பதிப்பு தொகுப்பு;

தமிழ் முரசு அனைத்து மின்னிலக்கம்+அச்சுப்பதிப்பு தொகுப்பு;

தமிழ் முரசு அனைத்து மின்னிலக்கத் தொகுப்பு; அல்லது

தமிழ் முரசு + த ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் செய்தி கைக்கணினி தொகுப்பு.

4. தயவுசெய்து மேல்விவரங்கள் அறிய பின்வரும் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் கவனமாகப் படிக்கவும்.

# விதிமுறைகளும் நிபந்தனைகளும்

## பொதுவானவை

1. அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்கேற்பது http://sph.com.sg/terms-and-conditions/online-contests/ இணையத்தளத்தில் கிடைக்கும் போட்டிகள் மற்றும் அதிர்ஷ்டக் குலுக்கல்களின் விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ("பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்"), இந்த விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் ("சிறப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்") (மொத்தமாக, "விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்") உட்பட்டது.

2. பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் சிறப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இடையில் ஏதேனும் சர்ச்சை அல்லது முரண்பாடு இருந்தால், அத்தகைய நிலையில் சிறப்பு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளே மேலோங்கி இருக்கும்.

3. அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்கேற்பதன்மூலம், விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும், இதன்பிறகு எஸ்பிஹெச் செய்யக்கூடிய ஏதேனும் திருத்தங்கள், சேர்ப்புகள், மாற்றுகள், மாறுபாடுகள், மாற்றியமைப்புகள் ஆகியவற்றுக்கும் கட்டுப்படவும் உடன்படவும் பங்கேற்பாளர்கள் ஏற்புடன் ஒப்புக்கொள்கிறார்கள். அவை ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் அனைத்து வகையிலும் இறுதியாகவும் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கும். அதிர்ஷ்டக் குலுக்கலின் அனைத்து அம்சங்களிலும் எஸ்பிஹெச் எடுக்கும் தீர்மானமே இறுதியானது, விசாரிப்புகள், முறையீடுகள் உட்பட, எந்தவொரு வாய்மொழியான அல்லது எழுத்துமூலமான கடிதப் போக்குவரத்துக்கும் பதிலளிக்கப்படமாட்டாது.

4. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எதற்காவது உடன்படாவிட்டால் அல்லது எதையாவது மீறினால், பங்கேற்பாளர் அதிர்ஷ்டக் குலுக்கலில் இருந்து தகுதிநீக்கம் செய்யப்படலாம், வெல்லப்பட்ட பரிசுகள் பறிமுதல் செய்யப்படலாம், தரப்படாமல் இருக்கலாம், மீட்கப்படலாம் அல்லது திரும்பப் பெறப்படலாம்.

## தகுதிநிலை

1. விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் பொறுத்து, 30 நவம்பர் 2020 தேதிப்படி தகுதிபெறும் தொகுப்புகளில் ஏதேனும் ஒன்றுக்கு சந்தா வைத்திருக்கும் ஒவ்வொரு பங்கேற்பாளருக்கும் அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்குபெற ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

2. அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்குபெற 18 வயதுக்குக் குறைவானவர்கள் தகுதிபெற மாட்டார்கள். இந்த அதிர்ஷ்டக் குலுக்கலில் சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகள், வேலை அனுமதி அட்டை வைத்திருப்போர் மட்டுமே பங்குபெறலாம்.

3. ஏற்பாட்டாளரின் ஊழியர்கள், அல்லது பங்காளி / பொறுப்பாதரவாளர், சில்லறை விற்பனையாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், சார்பாளர்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தரப்பினர் ஒவ்வொருவரது உடனடி குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்குபெற தகுதிபெற மாட்டார்கள்.

4. வெற்றியாளர்கள் அனைவரும், எஸ்பிஹெச் தெரியப்படுத்தும் காலகட்டத்தில், பிளாசா சிங்கப்பூராவில் 04-60/61 முகவரியில் அமைந்திருக்கும் மொஜிட்டோ கடையில் தங்களது பரிசைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## அதிர்ஷ்டக் குலுக்கலின் விவரங்கள்

1. எஸ்பிஹெச் நியூஸ் சென்டரில் 10 டிசம்பர் 2020 அன்று காலை 10 மணிக்கு மின்னியல் முறையில் குலுக்கல் நடத்தப்படும். 30 நவம்பர் 2020 தேதிப்படி தகுதிபெறும் தொகுப்புகளில் ஏதாவது ஒன்றுக்குச் சந்தா வைத்திருக்கும் பங்கேற்பாளர்கள் அதிர்ஷ்டக் குலுக்கலுக்குத் தானாகவே தகுதி பெறுவார்கள். தகுதிபெறும் பங்கேற்பாளர்களிலிருந்து அதிர்ஷ்டக் குலுக்கலின் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சந்தாதாரர்கள் அதிர்ஷ்டக் குலுக்கலுக்கென தனியொரு நுழைவு அல்லது விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை.

2. வெற்றியாளர்கள் அனைவருக்கும் 17 டிசம்பர் 2020 தேதிக்குள் மின்னஞ்சல்/தொலைபேசி வழியாகத் தெரியப்படுத்தப்படும்.

## பரிசுகள்

1. ஒவ்வொரு பங்கேற்பாளரும் அதிர்ஷ்டக் குலுக்கலில் அதிகபட்சம் ஒரு (1) பரிசு வெல்லலாம், மறுமுறையும் பங்கேற்பாளர் ஒரு வெற்றியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அது புறக்கணிக்கப்படும்.

2. வெற்றியாளர்கள் அனைவரும் அடையாளம் காணும் நோக்கத்திற்காகத் தங்களது புகைப்பட அடையாள அட்டைகளைக் காட்டவேண்டும், அதோடு தாங்கள் வென்ற பரிசைப் பெற்றுக்கொள்வதற்குமுன் தாங்கள் தகுதி பெற்றதை உறுதிப்படுத்தும் எழுத்துபூர்வ அறிக்கையில் கையெழுத்திடவேண்டும். பரிசுகளை நேரடியாக அல்லது அனுமதி அளிக்கப்பட்ட பிரதிநிதி மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதி அளிக்கப்பட்ட பிரதிநிதி, பங்கேற்பாளர் பூர்த்திசெய்து கையெழுத்திட்ட அதிகாரமளிப்புக் கடிதத்தையும், பங்கேற்பாளர் தனது தகுதிநிலையை உறுதிப்படுத்தி கையெழுத்திட்ட எழுத்துபூர்வ அறிக்கையையும், பங்கேற்பாளர், பிரதிநிதி இருவரது புகைப்பட அடையாள அட்டைகளையும் பரிசைப் பெற்றுக்கொள்ளும்போது காட்டவேண்டும்.

3. ஏற்பாட்டாளரிடம் வழங்கப்படும் அனைத்து விவரங்களும் துல்லியமாக இருப்பதைப் பங்கேற்பாளர் உறுதிப்படுத்தி, ஏதேனும் விவரங்கள் தவறாக இருந்தால் (ஏற்பாட்டாளரால் முக்கியமென கருதப்படுபவை) தகுதிநீக்கம் செய்யப்படும் மற்றும்/அல்லது ஏதேனும் பரிசு வென்றிருந்தால் அது பறிமுதல் செய்யப்படும், தரப்படாது, மீட்டுக்கொள்ளப்படும் அல்லது திரும்பப் பெறப்படும் என்பதை ஏற்றுக்கொள்கிறார்.

4. பரிசுகளை மாற்றிக்கொள்ளவோ அல்லது பரிமாற்றம் செய்யவோ முடியாது. அதோடு, ரொக்கமல்லாத பரிசுகளுக்குப் பதிலாக ரொக்கம் பெறவும் முடியாது.

5. வெல்லப்படும் பரிசினால் ஏற்படும் வரி அல்லது வேறு ஏதேனும் பொறுப்புக்கு ஏற்பாட்டாளர் எந்தவிதப் பொறுப்பும் ஏற்கமாட்டார்.

6. பரிசுகள் கிடைப்பது இருப்பைப் பொறுத்தது. அதோடு, பொருந்தத்தக்க சட்டத்திற்கிணங்க, எந்தவொரு பரிசுக்கும் பதிலாக நிகரான அல்லது கூடுதல் மதிப்புள்ள பரிசை மாற்றாக வழங்கும் உரிமை ஏற்பாட்டாளருக்கு உண்டு. வெல்லப்படும் அனைத்து பரிசுகளும் சம்பந்தப்பட்ட பங்காளிகள் / பரிசுகளை வழங்கும் அமைப்புகள் ஆகியன விதிக்கக்கூடிய விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டவை. விளம்பரங்களிலும் விற்பனைப் பொருட்களிலும் பயன்படுத்தப்படும் பரிசுகளின் படங்கள் உண்மையான பரிசுகளைப் பிரதிநிதிக்கும் படங்கள் மட்டுமே, உண்மையான பரிசுகள் படங்களிலிருந்து மாறுபடக்கூடும்.

7. எஸ்பிஹெச் குழுமம், எந்தவொரு சமயத்திலும் தனது ஏகபோக விருப்பப்படி, பங்கேற்பாளர்களிடம் முன்னறிவிப்பு செய்யாமல் எந்தவொரு பரிசையும் மாற்றுவதற்கு, மீட்டுக்கொள்வதற்கு, சேர்ப்பதற்கு அல்லது மாற்றியமைப்பதற்கு உரிமை பெற்றுள்ளது.

8. பரிசுகள் மூன்றாம் தரப்பு வணிகர்களால் வழங்கப்படுகின்றன. எஸ்பிஹெச் இத்தகைய வணிகரின் முகவரல்ல, வணிகர் வழங்கும் பரிசுகளுக்கு அல்லது பொருட்களின் தரத்திற்கு எந்தவிதப் பிரதிநிதிப்பையோ அல்லது உத்தரவாதத்தையோ அளிக்கவும் இல்லை. பரிசுகளின் தரம் மற்றும்/அல்லது நிலை பற்றி ஏதேனும் சர்ச்சை எழுந்தால், வணிகருடன் நேரடியாகத் தீர்க்கப்படவேண்டும். எஸ்பிஹெச் உதவி புரியவோ அல்லது வணிகருடன் தொடர்புகொள்ள பங்கேற்பாரின் சார்பில் செயல்படவோ வேண்டிய அவசியம் இல்லை.

## மற்றவை

1. அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்கேற்பதன்வழி, பங்கேற்பாளர்கள் பின்வருபவற்றுக்கு இணங்குகிறார்கள்:

1.1. சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் மற்றும் அனைத்து தனிப்பட்ட விவரங்களும், பல்வேறு நோக்கங்களுக்காகச் சேகரிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு மற்றும்/அல்லது எஸ்பிஹெச் மற்றும் அதைச் சார்ந்த நிறுவனங்களிடமும் (கூட்டாக, "எஸ்பிஹெச் குழுமம்") அதிர்ஷ்டக் குலுக்கலின் பொறுப்பாதரவாளரிடமும்(களிடமும்) வெளியிடப்படலாம். அதிர்ஷ்டக் குலுக்கல் தொடர்பான நோக்கங்களுக்காகப் பங்கேற்பாளருடன் தொடர்பு கொள்ளுதல், கோரிக்கையின்பேரில் பங்கேற்பாளருக்குப் பொருட்களும் சேவைகளும் வழங்குதல், எஸ்பிஹெச் குழுமம் அல்லது மற்ற தரப்பினர் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாகப் பங்கேற்பாளருக்கு சந்தை விளம்பரத் தகவல் அனுப்புதல், பங்கேற்பாளர் எஸ்பிஹெச் குழுமத்திற்குத் தனது இணக்கத்தை அளித்த இதர நோக்கங்கள் ஆகியன இதில் உள்ளடங்கும்.

1.2. எஸ்பிஹெச் குழுமம், பங்கேற்பாளர்களின் புகைப்படங்கள் அல்லது கேட்பொலி-காணொளி அல்லது இதர பதிவுகள் உள்ளிட்ட தனிப்பட்ட விவரங்களைச் ("பொருட்கள்"), எஸ்பிஹெச் குழுமத்தின் வெளியீடுகள், படைப்புகள், இணையத்தளங்களிலுள்ள விளம்பரப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களிலும், அசல் வடிவில் அல்லது திருத்தியமைத்த வடிவில், அதிர்ஷ்டக் குலுக்கலை, தகுதிபெறும்

தொகுப்புகள் விளம்பரப்படுத்தும் அல்லது மற்ற நோக்கங்களுக்காக, மேற்கொண்டு தகவலளிப்பு, ஊதியம் அல்லது இழப்பீடு எதுவும் இல்லாமல், விளம்பரத்திற்காக மற்றும்/அல்லது விளம்பரங்களில் பயன்படுத்துவதற்காகச் சேகரித்து, பயன்படுத்தி, தங்களுக்கு இடையிலும் தங்களது சேவை வழங்குநர்களுக்கு இடையிலும் வெளியிட்டு பகிர்ந்து கொள்ளலாம்.

1.3. அனைத்து பொருட்களிலும் பொருட்களுக்கும் உள்ள பதிப்புரிமையும் இதர அறிவுச் சொத்துரிமைகளும் மேற்கொண்டு இழப்பீடு ஏதுமின்றி எஸ்பிஹெச்-இன் ஏகபோக உரிமைகளாக இருக்கும்.

2. பங்கேற்பாளர்கள், எஸ்பிஹெச்-இடம் முன்கூட்டியே எழுத்துபூர்வ அனுமதி பெறாமல், அதிர்ஷ்டக் குலுக்கலின் தொடர்பில் செய்தியாளர்களிடம் அல்லது வேறு ஊடகத்திடம் பேசவோ அல்லது ஏதேனும் பேட்டிகள் அளிக்கவோ அல்லது கருத்துகள் கூறவோ கூடாது.

3. ஏதேனும் பரிசு தொடர்பான உத்தரவாதக் கோரிக்கைகள் அனைத்தும் பொருந்தத்தக்க உற்பத்தியாளரிடம் அல்லது சேவை வழங்குநரிடம் செய்யப்படவேண்டும். இந்த அதிர்ஷ்டக் குலுக்கலுக்கு அல்லது பரிசுகளுக்குப் பொருந்தும் இந்த விதிமுறைகளிலும் நிபந்தனைகளிலும் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாத சட்டம், பிரதிநிதிப்புகள், உத்தரவாதங்கள் ஆகியவற்றால் விலக்கப்படாதவை மட்டுமே இதற்கு விதிவிலக்கு. அதோடு, திருப்திகரமான தரம், வணிகத்தன்மை அல்லது ஏதேனும் பரிசுகள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குத் தகுதியானது என்பதைக் குறிப்பிடும் உத்தரவாதங்கள் உட்பட, குறிப்பீடுள்ள அனைத்து உத்தரவாதங்களும் விலக்கப்பட்டுள்ளன.

4. அதிர்ஷ்டக் குலுக்கலுடன் அல்லது ஏதேனும் பரிசுடன் தொடர்புடைய ஏதேனும் இழப்பு (மறைமுறைமான அல்லது பின்விளைவான இழப்பு உட்பட), சேதம், தனிப்பட்ட காயம் அல்லது மரணம் எதற்கும் எஸ்பிஹெச் பொறுப்பாகாது. சட்டத்தினால் விலக்கப்பட முடியாத ஏதேனும் பொறுப்பு மட்டுமே இதற்கு விதிவிலக்கு (அந்நிலையில் சட்டம் அனுமதிக்கும் குறைந்தபட்ச அளவுக்குள் பொறுப்பு கட்டுப்பட்டிருக்கும்).

5. ஏற்பாட்டாளர் அனுப்பிய மின்னஞ்சலில் அல்லது தகவலில் குறிப்பிடப்பட்டுள்ள மீட்புத் தேதிக்குள் பரிசைப் பெற்றுக்கொள்ளத் தவறினால், பங்கேற்பாளர் பரிசைக் கோரக்கூடிய உரிமை செல்லாமல் போய்விடும். பெற்றுக்கொள்ளப்படாத பரிசுகள் அனைத்தையும் தன் விருப்பப்படி கையாளும் உரிமை ஏற்பாட்டாளருக்கு உண்டு.

6. அதிர்ஷ்டக் குலுக்கலின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் தனது இணையத்தளத்தில் எழுத்துமூல அறிவிப்பைப் பதிவேற்றுவதன்வழி மாற்றும் அல்லது திருத்தும் உரிமை எஸ்பிஹெச்-க்கு உண்டு.

## பரிசுகளின் விவரங்கள்

5 19-பாக அர்கோபல் விருந்து செட்கள் (மதிப்பு: $179)

6 பிலிப்ஸ் ஏர் பியூரிஃபாயர் சாதனங்கள் (மதிப்பு: $299)

6 பிலிப்ஸ் கையடக்க வேக்யூம் சாதனங்கள் (மதிப்பு: $99)

2 பிலிப்ஸ் ஏர் ஃபிராயர் சாதனங்கள் (மதிப்பு: $269)

4 பெனசானிக் மைக்ரோவேவ் சாதனங்கள் (மதிப்பு: $369)

10 $100 ஹார்வி நார்மன் பற்றுச்சீட்டு

**TAMIL MURASU SUBSCRIPTION LUCKY DRAW TERMS & CONDITIONS**

**HOW TO PARTICIPATE**

1. The Tamil Murasu Subscription Lucky Draw ("Lucky Draw") is organised by Singapore Press Holdings Limited (the "Organiser" or "SPH") (address: 1000 Toa Payoh North, News Centre, Singapore 318994) and the draw date of the Lucky Draw is 10 December 2020.

2. The Lucky Draw is only open to persons ("participants") who have a direct active Tamil Murasu subscription with SPH for any one of the Eligible Packages (as defined below) as of 30 November 2020. For the avoidance of doubt, subscribers who are currently paying their subscription fees to a newspaper vendor are not eligible to participate in the Lucky Draw.

3. "Eligible Packages" means home subscriptions in Singapore to:

(i) Tamil Murasu Print Package;

(ii) Tamil Murasu All-Digital+Print Package;

(iii) Tamil Murasu All-Digital Package; or

(iv) Tamil Murasu + The Straits Times News Tablet Bundle Package.

4. Please read the below Terms & Conditions carefully for more details.

**TERMS & CONDITIONS**

**General**

1. Participation in the Lucky Draw is subject to the Contests & Lucky Draws Terms and Conditions available at http://sph.com.sg/terms-and-conditions/online-contests/ ("General T&Cs") and these Terms and Conditions ("Specific T&Cs") (collectively, "T&Cs").

2. In the event of any conflict or inconsistency between the General T&Cs and the Specific T&Cs, the Specific T&Cs shall prevail to the extent of such conflict or inconsistency.

3. By participating in the Lucky Draw, participants accept and agree to be bound by and to comply with the T&Cs and any amendments, additions, replacements, variations and modifications which SPH may make hereto, which shall be final and binding in all

respects on each participant. SPH’s decision on all aspects of the Lucky Draw shall be final and no verbal or written correspondence, including but not limited to enquiries and appeals, shall be entertained.

4. Non-compliance with or breach of any of the T&Cs may disqualify a participant from the Lucky Draw, and any prizes won may be forfeited, withheld, withdrawn or reclaimed.

**Eligibility**

1. Subject to the T&Cs, each participant who has an active subscription to any one of the Eligible Packages as of 30 November 2020 will have one chance to participate in the Lucky Draw.

2. Persons under the age of 18 will not be eligible to participate in the Lucky Draw. This Lucky Draw is only open to Singaporeans, Permanent Residents and Employment Pass holders.

3. Employees of the Organiser, or partner / sponsor, retailers, wholesalers, affiliates and members of the immediate families of each of the aforementioned parties are not eligible to participate in the Lucky Draw.

4. All winners will have to collect their prize from Mojito's store located at 04-60/61 in Plaza Singapura, during the collection period notified by SPH.

Mechanics of Lucky Draw

1. A draw will be conducted electronically on 10 December 2020, at 10am at SPH News Centre. Participants who have an active subscription to any one of the Eligible Packages as of 30 November 2020 will automatically be eligible for the Lucky Draw and winners of the Lucky Draw will be selected from the eligible participants. Subscribers need not submit any separate entry or application form for the Lucky Draw.

2. All winners will be notified by email/phone by 17 December 2020.

**Prizes**

1. Each participant in the Lucky Draw may win a maximum of one (1) prize, and any subsequent drawing of a participant's entry as a prize winner will be disregarded.

2. All winners are required to produce their photo identification documents for identification purposes, and to sign a written statement confirming their eligibility before collecting their prize won. The prizes must be collected in person or through a duly authorized representative. The authorized representative must present a duly completed and signed authorization letter from the participant, a duly completed and signed a written statement from the participant confirming the participant's eligibility, and both the participant's and the representative's photo identification documents for verification at the point of collection.

3. Participant affirms the accuracy of all information provided to the Organiser and accepts that any misrepresentation of any fact or particulars (deemed as material by the Organiser) shall result in disqualification and/or the forfeiture, withholding, withdrawal or reclaiming of any prize won.

4. Prizes are not transferable or exchangeable and non-cash prizes cannot be exchanged for cash.

5. The Organiser accepts no responsibility for any tax or other liability that may arise from the prize winnings.

6. Prizes are subject to availability and the Organiser has the right to substitute any prize for a comparable prize of equal or greater value to be awarded in lieu, subject to any applicable law. All prizes won are subject to terms and conditions as may be imposed by the relevant partners / organizations sponsoring the prizes. Images of prizes used in any advertising and marketing material are only representative of the actual prizes and the actual prizes may differ from images shown.

7. SPH Group reserves the right, at any time in its sole and absolute discretion, to substitute, withdraw, add to or alter any of the prizes without notice to the participants.

8. The prizes are provided by third party merchants. SPH is not an agent of such merchant and makes no representation or warranty as to the prizes or the quality of the goods provided by the merchant. Any dispute about the quality and/or condition of the prizes is to be resolved directly with the merchant and SPH is not obliged to assist or act on the participant's behalf in communicating with the merchant.

**Miscellaneous**

1. By participating in the Lucky Draw, participants agree that:

1.1. any and all personal data submitted may be collected, used, processed and/or disclosed to SPH and its related corporations (collectively, "SPH Group") and the Lucky Draw sponsor(s) for various purposes, including to communicate with the participant for purposes related to the Lucky Draw, to provide goods and services to the participant upon request, to send the participant marketing information on products and services offered by SPH Group or other parties, and for such purposes that the participant may have otherwise given his/her consent to SPH Group.

1.2. SPH Group may collect, use, disclose and share amongst themselves and their respective service providers, the participant's personal data, including the photographs or audio-video or other recordings of these participants ("Materials") for publicity and/or use in advertisements across all media, including, without limitation, in SPH Group's publications, presentations, promotional materials on their websites, in its original or edited format, and whether to promote the Lucky Draw, the Eligible Packages or otherwise without further notification, remuneration or compensation; and

1.3. the copyright and all other intellectual property rights in and to all Material shall vest solely and absolutely in SPH without further compensation.

2. Participants shall not, without the prior written approval of SPH, speak to the press or any other media nor give any interviews or comments relating to the Lucky Draw.

3. All warranty claims in regards to any prize should be directed to the applicable manufacturer or service provider. Except to the extent that they may not be excluded by law, no representations, warranties, terms or conditions that are not expressly stated in these terms and conditions apply to this Lucky Draw nor in respect of the prizes and all implied warranties are excluded, including but not limited to, the implied warranties of satisfactory quality, merchantability or fitness for a particular purpose of any of the prizes.

4. SPH shall not be liable for any loss (including, without limitation indirect or consequential loss), damage, personal injury or death in connection with the Lucky Draw, or any prize, except any liability that cannot be excluded by law (in which case that liability is limited to the minimum allowable by law).

5. Failure to claim an awarded prize within the redemption date(s) stated in the email or notification sent by the Organiser will make a participant's claim for a prize invalid. The Organiser reserves the rights to deal with all unclaimed prizes in any manner it deems fit.

6. SPH has the right to vary or amend any of the terms and conditions of the Lucky Draw upon notice in writing by posting to its website(s).

**DETAILS OF PRIZES**

5 units of 19-pc Arcopal Dinner Set (Worth: $179)

6 units of Philips Air Purifier (Worth: $299)

6 units of Philips Handheld Vacuum (Worth: $99)

4 units of Panasonic Microwave (Worth $369)

10 units of $100 Harvey Norman Vouchers